பிரைம் கிராமின்

# மெஹெவர

இருள் நீக்கும் உன்னத பணி

3 ஆம் தொகுதி - எட்டாவது இதழ் - 2015 ஏப்ரல்



தயாரிப்பு : திருமதி டபிள்யு. பிரேமவதி
பிரைம் கிராமின் அம்பலாங்கொடை கிளை அங்கத்தவர்
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க

HNB "Prime Grameen is a subsidiary of Hatton National Bank PLC"

வாழ்க்கையின் அர்த்தம்



# வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்கு

## முகாமைத்துவம் செய்வது எவ்வாறு . . . .?



சட்டத்தரணி, கலாநிதி
குமா இத்தமல்லென
ஆளமைப் பயிற்சி நிபுணர்

நேரத்தை முகாமைத்துவம் செய்ய முடியாது. ஒருவர் தன்னை முகாமை செய்யும் போது காலமும் அவருடன் முகாமைத்துவம் செய்யப்படும்.

ஒவ்வொருக்கும் நோக்கம் மற்றும் செயற்பணியுடன் எதிர்கால இலக்கொன்றை முன்வைத்து வேலை செய்தால் குறைந்த நேரத்தில் அதிகமான வேலைகளை தேவையான அளவு செய்து முடிப்பதற்கு எந்த வருடத்திலும். . . எந்த தசாப்தத்திலும் . . . வாழ்க்கை முழுவதும் . . . சிறந்த பயனைப் பெற்றுக் கொள்ள முடியும். நாள், வாரம், மாதம், வருடம், பத்தாண்டு என வாழ்க்கையின் இறுதி நாட்களை பிரித்து ஒரு நோக்கத்தோடு செயற்படுபவர்கள் அவர்களின் நோக்கங்களில் பலவற்றை பூர்த்தி செய்கிறார்கள் என்று ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. இதில் IQ மற்றும் EQ ஆகிய பதங்களின் பொறுப்புகள் தொடர்பாக எமது அவதானத்தை செலுத்தலாம் என்று நினைக்கிறோம்.

IQ என்ற பதம் சகல விடயங்களிலும் தர்க்க ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் செயற்படுத்துவதற்கு முயற்சிகளை செய்யும். EQ என்ற பதமானது சகலவற்றிலும் உணர்வுபூர்வமான விடயங்களுக்கு முன்னுரிமை அளித்து அந்த நேரத்தில் முயற்சி செய்யும் குணாம்சங்களைக் கொண்டிருக்கும். IQ என்ற பதம் நோக்கங்களை இலக்காக வைத்து செயற்படுவதுடன் EQ மனதில் எழும் விடயங்களை சுதந்திரமாக வேலை செய்வதை விரும்புகின்றது. இந்த இரு முறைகளிலும் நன்மையும், தீமையும் உண்டு. அதனால், எமக்கு தேவையானது இரண்டுக்கும் மத்தியில் புரிந்துணர்வுடன் வேலை செய்வதாகும். சகலதையும் தர்க்கரீதியாக சிந்தித்து இலக்கை அடையமுடியுமென்பது சவாலுக்குரியதாகும். அவ்வாறே, சகலதும் உணர்வுகளின்றி உணர்வை முன்னிலைப்படுத்தி செயற்படும் போது பிரச்சினைகள் ஏற்படும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். அதனால், இந்த இரண்டு பதங்களின் உள்ளடக்கங்களை நன்றாக ஆராயந்து உணர்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கும் அதேவேளை, எதிர்கால இலக்கை திட்டமிட்டு நடுநிலையாக வாழ்க்கையை கொண்டு செல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

சிங்கள தமிழ் புதுவருட போன்ற நிகழ்வுகள் கலெண்டரில் இணைத்துக் கொள்ளும் போது மக்களுக்கு இது தொடர்பாக தர்க்க ரீதியான அறிவும், உணர்வு ரீதியான அறிவுக்கும் இடையில் சரிசமமாக இருக்கிறது என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். நீங்கள் புதுவருடத்தை விமர்சையாக கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த காலப்பகுதியில் இன்றிலிருந்து அடுத்த 12 மாதங்களுக்கான நோக்கங்களைப் பற்றி சிந்திப்பீர்களா. . . அவற்றை நிறைவேற்றுவதற்காக உங்களால் செய்யக்கூடிய பிரதான விடயங்களை குறிப்பெடுத்து அதற்கு அமைவாக செயற்படுவதற்கு தீர்மானிக்கவும். அதனை சரியான முறையில் செய்ய முடியுமாக இருந்தால் பாரிய வெற்றியொன்று அடுத்த வருடம் கிட்டுமென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

சாதாரண மக்களின் பிரதான குறைபாடுகளாக குறிப்பிடுவது “ஏதோ செய்து கொண்டிருக்கிறோம்” பிரச்சினைகள் ஏற்பட்ட பிறகு அதற்கான தீர்வை காண்பதற்கு பாரிய முயற்சிகளை செய்ய வேண்டும். பிரச்சினைக்கு தீர்வு காணும் போது இன்னுமொரு பிரச்சினை இயற்கை தோன்றுமென்று மனோ வைத்தியர்களின் கருத்தாகும். அதனால், பிரச்சினை ஏற்படும் முன் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை அறிந்து அதற்கு பரிகாரம் தேடுவது அறிவுபடைத்தவர்களின் சுபாவமாகும்.

எமக்கு கிடைத்த காலப்பகுதியில் எம்மால் செய்யக்கூடிய பணிகளை அளவீடு செய்து அந்த இலக்கை அடைவதற்காக காலத்தை முகாமைத்துவம் செய்வது முதன்மையான விடயமாகும்.

சிலர் வாழ்க்கையில் விசேட இலக்கொன்றை தீர்மானித்து அதற்கு முழு மூச்சாக செயற்படுவதைக் காண முடியும். என்றாலும் அந்த இலக்கை அடையும் போது வாழ்க்கையில் பல விடயங்கள் செய்ய முடியாமல் போகும் சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். ஏனெனில் இந்த வாழ்க்கை வட்டத்தில் தனிநபரின் குணாம்சங்கள் பல நடிக்க வேண்டியேற்படுவதாலாகும். ஓர் இலக்கை அடைந்து கொள்வதற்காக பாரிய தியாகங்களை செய்யும் ஒருவர் ஏனைய குணாம்சங்களுக்கு கொடுக்க வேண்டிய பொறுப்புகளை சரிசமாக பகிர்ந்து கொடுப்பது சிரமமான விடயமாகும். உதாரணமாக திருமணம் முடித்து பிள்ளை பெறுபேறு உள்ள கணவன் தொடர்பில் சற்று நோக்குவோம். அவருக்கு மனைவி இருப்பதால் கணவனின் விருப்பத்திற்கா, பிள்ளைகள் இருப்பதால் பிள்ளையின் விருப்பத்திற்கா, பெற்றோர் இருப்பதால் பெற்றோரின் விருப்பத்திற்கா, நண்பர்கள் இருப்பதால் நண்பர்களின் விருப்பத்திற்கா, அயல் வீட்டார் இருப்பதால் அயல்வீட்டாரின் விருப்பத்திற்கா, நிறுவமொன்றில் தொழில் புரிந்தால் அந்நிறுவன உத்தியோகத்தரின் விருப்பத்திற்கா ஆகிய அடிப்படையில் குணாம்சங்கள் பலவற்றை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஏற்படுகிறது. ஒருவர் நிறுவனமொன்றின் உத்தியோகத்தருக்காக 95 வீதமான காலத்தை செலவிட்டால் அவருடைய கணவன், தகப்பன், மகன், அயல்வீட்டார், நண்பர் ஆகியோருக்கு 5வீதமான பங்களிப்பையே வழங்க வேண்டியேற்படும். அதில் வீட்டிற்குள்ளேயா, நண்பர்களுடனனா, அயல் வீட்டாருடனா என்ற பிரச்சினை இயற்கையாகவே ஏற்படலாம். இந்த நிலைமை மறுபக்கமாகவும் இவ்வாறே ஏற்படும். ஒருவர் வீட்டு செயற்பாட்டுக்கு அதிகளான நேரத்தை செலவிடும் போது அவருடைய தொழில் பாதிப்படைந்து பொருளாதார ரீதியில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படுவதை தடுக்க முடியாது. அவர் தொழில் செய்யும் நிறுவனத்துக்கு அவரினால் கிடைக்க வேண்டிய சேவை உரிய முறையில் கிடைக்காவிட்டால் நிறுவனத்தினால் புறக்கணிக்கப்படும் நிலை ஏற்படும்.

இந்த நிலைமையை நாம் நன்றாக புரிந்து கொண்டு எமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு என்ன என்பது தொடர்பில் நன்றாக சிந்தித்து அந்தந்த பணிகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதுடன் அவற்றை மதிப்பீடு செய்து எந்த பணிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதை தீர்மானிப்பது புதிய யுகத்தின் பிரதான நேர முகாமைத்து முறை என பரிந்துறை செய்ய முடியும். சிங்கள புத்தாண்டு சம்பிரதாயத்தை பார்த்தால் நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று IQ மற்றும் EQ (தர்க்க, அறிவு மற்றும் உணர்வு ரீதியான அறிவு) ஆகிய . . . . . . . பிரிவுகளுக்கு தமக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு குணாம்சங்களை சரிசமாக எடுத்து அதற்கேற்றால் போல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். அதனால், இந்த புதுவருட சுபநேரத்தில் பேனையொன்றையும் தாள் ஒன்றையும் எடுத்து உங்களின் இலக்கை சரியாக எழுதி ஒவ்வொரு நபருக்கும் தம்மால் செய்ய வேண்டிய பொறுப்புகள் போதுமானதா என்பது தொடர்பில் சரியான அளவொன்றை எடுத்து அதனை முகாமைத்துவம் செய்து வாழ்க்கையை நடத்துவதற்கு திடசங்கட்பம் பூண உங்களுக்கு அதிஷ்டமும் சக்தியும் கிடைக்க பிரார்த்திக்கிறோம்.

மெஹெவர

# எமக்கு மீண்டும் வாழ்க்கையை. . . பெற்றுக் கொடுத்தமைக்கு உங்களுக்கு புண்ணியம் . .



அன்பான ஐயா . . .

நாளை தினம் தொடர்பாக எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி
வாழ்ந்து கொண்டிருக்கும் சிறுவர்கள் பலருக்கு மத்தியில் நாம் இருவர் மாத்திரமே.
வாழ்க்கையில் நாளை தொடர்பாக அசாதாரண நிலை ஏற்படும் என்று தெரிந்தும்
அந்த அசாதாரண நிலைக்கு விடிவு காண முற்படுகையில்
நீங்கள் எங்களுக்கு உதவி செய்வீர்கள் என்று தெரிந்து கொண்ட போது
எமது சிறிய இதயங்களைப் போல எமது தாய், தந்தையரின் உள்ளங்களிலும்
சொல்ல முடியாத அளவுக்கு சந்தோசம் ஏற்பட்டது. . .
அந்த சந்தோசம் . . அந்த வாழ்க்கை . . எமக்கு மீண்டும் பெற்றுக்
கொடுத்த உங்களுக்கு சகலருக்கும் புண்ணியம் உண்டாகட்டும் . . .
ஐயா . . .
இனிமேல் எங்களுக்கு எதிர்காலம் தொடர்பாக நினைக்கலாம் . . .
அதற்காக நம்பிக்கையை நிலைநிறுத்திக் கொள்ளலாம் . . .
அது உங்களின் ஆசியினால் . . .
நன்றி . . .
ஷமோதி, கவிஷ்க –

ஷமோதி ஹங்ஷனி. . . கவிஷ்க பியமால் ... வாழ்க்கையில் நறுமனங்களை சுவாசித்துக் கொண்டிருக்கும் இளந்தளிர்கள் இருவராகும். என்றாலும் அந்த நறுமனத்தை சுவாசிப்பதற்கு இரு மலர்களும் கடந்த காலங்களில் நம்பிக்கையற்றே இருந்தன. அவர்களின் கதை சற்று கசப்பாக இருந்தாலும் அந்தக் கதை இறுதியில் இனிப்பாக அமைந்ததால் பிரைம் கிராமின் சகோதரர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நாம் நினைத்தோம்.

சந்திரா குமாரி சகோதரி பிரைம் கிராமின் நகரக் கிளையின் அங்கத்தவர். உடைகளை தைப்பது அவருடைய சுயதொழிலாக இருந்ததுடன் தனது மூன்று குழந்தைகளில் ஷமோதி ஹங்ஷனி பிலியந்தலை சந்திரரத்ன மானவசிங்க பாடசாலையில் கல்வி கற்று வந்தார். 2014ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொண்ட ஹங்ஷனி, பிலியந்தலை மத்திய மகா வித்தியாலயத்தில் படிப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. இதற்கு முன்னர் அவ்வாறான ஒரு நோய் ஏற்படாததை சந்திரா குமாரி அன்றுதான் அறிந்து கொண்டார்.

“குழந்தையின் இதயத்தில் துவாரம் . . . உடனடியாக சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் . . .” ஹங்ஷனியை பரிசோதனை செய்த விசேட வைத்திய நிபுணர் ருவன் மொரவக்கோர தெரிவித்ததை அடுத்து சந்திரா குமாரிக்கு முழு உலகமும் இருளடைந்ததைப் போன்று தென்பட்டது. இப்போ நான் என்ன செய்வது. . .? என்றாலும் அவ்வளவு பெரிய தொகையை தேடிக்கொள்வது இலகுவான விடயமல்ல என்பதுதான் . . .

“லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இலவசமாக சத்திரசிகிச்சை செய்ய முடியுமாக இருந்தாலும் இதய சத்திரசிகிச்சைக்கு தேவையான பொருட்களை எம்மால் வாங்க வேண்டியேற்பட்டது. அதற்கு ஒரு இலட்சம் ரூபா வரை தேவைப்படும். இந்நேரத்தில் அது மிகப்பெரிய தொகை. எமக்கு தெரிந்த நண்பர்கள் ஊடாக இதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றாலும் அதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது என்பதை அறிந்திருந்தேன். இவ்விதம் நாம் துன்பப்பட்டிருந்த போது பிரைம் கிராமின் நிறுவன நகரக்கிளையின் முகாமையாளரின் ஊடாக “பிரைம் கிராமின் மெஹெவர உதவி நிதியம்” இருப்பதை அறிந்து கொண்டோம். . .”

பிரைம் கிராமின் புத்தளம் கிளை அங்கத்தவர் ஜசிந்தா பெர்னாந்து அவர்களும் சந்திரா போன்று துன்பத்தில் இருந்த போது அவரின் பத்து வயது மகன் கவிஷ்க பியுமால் பிறந்தது முதல் செவிப்புலன் பிரச்சினையால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான்.

“மகனுக்கு ஒன்றரை வயதில் அவரது செவிப்புலனில் பிரச்சினை இருப்பதை நான் தெரிந்து கொண்டேன். 2006 வைத்திய ஆலோசனையின் படி மகனுக்கு செவிப்புல உபகரணமொன்று பொருத்தப்பட்ட போதும் வளர வளர அது போதுமானதாக இருக்கவில்லை. சமூக சேவை திணைக்களத்தின் நிதி உதவியுடன் செவிப்புல உபகரணமொன்று பொருத்தப்பட்டாலும் அதனை பயன்படுத்த ஆரம்பித்த நாட்களில் இருந்து மகனின் இரு காதுகளும் வீக்கமடைந்தது. பொறுமை இழந்த நிலையில் பிரைம் கிராமின் நிறுவன சமன் ஹேமஜித் அவர்களிடம் எனது பிரச்சினைகள் தொடர்பாக தெளிவுபடுத்தினேன்.. . அப்போதுதான் “பிரைம் கிராமின் மெஹெவர உதவி நிதியம்” இருப்பதை அறிந்து கொண்டேன். . .”

பிரைம் கிராமின் மெஹெவர உதவி நிதியத்தின் பங்களிப்புடன் மேற்படி இரு சிறுவர்களுக்கும் உதவிகளை வழங்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக மெஹெவர உதவி நிதி இணைப்பாளரும் சிரேஷ்ட முகாமையாளருமான சுதேஷ் பெரேரா அவர்கள் இவ்விதம் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். . . “ஹங்ஷனி என்ற பெண்ணின் சத்திரசிகிச்சைக்காக மெஹெவ உதவி நிதியத்தின் ஊடாக எமக்கு 25,000ரூபா மாத்திரமே ஒதுக்கீடு செய்ய முடிந்தது. கவிஷாவின் செவிப்புல உபகரணத்துக்காகவும் இதே அளவான பணத்தை வழங்குவதற்கும் தீர்மானித்தோம். எனினும் இந்த இரு சிறுவர்களின் தேவைக்கு அந்தப் பணம் போதுமானதாக இருக்கவில்லை. குறைந்தளவான பணத்தை வழங்குவதில் எமக்கு பாரிய பிரச்சினை உள்ளது. இறுதியில் இது தொடர்பாக எமது முகாமைத்துவப் பணிப்பாளருக்கு . . . சமிந்த பிரபாத் அவர்களிடம் தெரிவித்தோம். அந்நேரத்தில் அந்த இரு சிறுவர்களின் பிரச்சினையை எமது செலவில் முழுமையாக தீர்த்து வைப்பதென்று அவர் தீர்மானித்தார். இதனடிப்படையில் பிரபாத் ஐயா அவர்களும் அவருடைய நண்பர்களும் இதற்கு தேவையான பணத்தை செல்வந்தர்களிடம் இருந்து திரட்டி ஹங்ஷனி, கவிஷ்காவின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டது.

நன்றாக கேட்கும் 96,000ரூபா பெறுமதியான செவிப்புலன் உபகரணம் கவிஷ்காவுக்கு பொருத்தப்பட்டது. அவ்வாறே, சிறந்த சத்திரிசிகிச்சையினால் ஹங்ஷனி பூரண குணமடைந்து சந்தோசமாக இருக்கிறாள். அந்த ஆனந்தக் கண்ணீரை சிந்திய இளஞ்சிறார்கள் இருவரும் நன்றி தெரிவிக்கவே பிரைம் கிராமின் நிறுவனத்துக்கு வருகை தந்தனர். எங்கள் அனைவரின் வாழ்க்கையிலும் சந்தோசமாக கொண்டாடப்படும் புதுவருட மாதத்தில், சிறுவர்களான ஹங்ஷனி, கவிஷ்க ஆகியோரும் இப்பெருநாளை ஆனந்தமாக கொண்டாடுவார்கள் என்பது உறுதி. அந்த ஆனந்தத்தைப் பெற்றுக்கொடுத்த நம் அனைவரின் வாழ்க்கையிலும் இன்று போல என்றும் உதவிகளை வழங்குவதற்கு திடசங்கட்பம் கொள்வோம்.

**அந்த ஆனந்தக் கண்ணீரை சிந்திய இளஞ்சிறார்கள் இருவரும் நன்றி தெரிவிக்கவே பிரைம் கிராமின் நிறுவனத்துக்கு வருகை தந்தனர். எங்கள் அனைவரின் வாழ்க்கையிலும் சந்தோசமாக கொண்டாடப்படும் புதுவருட மாதத்தில், சிறுவர்களான ஹங்ஷனி, கவிஷ்க ஆகியோரும் இப்பெருநாளை ஆனந்தமாக கொண்டாடுவார்கள் என்பது உறுதி. அந்த ஆனந்தத்தைப் பெற்றுக்கொடுத்த நம் அனைவரின் வாழ்க்கையிலும் இன்று போல் என்றும் உதவிகளை வழங்குவதற்கு திடசங்கட்பம் கொள்வோம்.**





**ஒற்றுமையாக கடமையாற்றும் போது இயற்கையாகவே தலைவராக தெரிவு செய்யப்படுவீர்கள்**

# பிரைம் கிராமின் கிளையின் செயற்பாடுகள்

சிறியளவில் கைத்தொழில்களை ஆரம்பித்து வாழ்க்கையில் வெற்றி பெற்ற மக்கள் நிறைந்த அம்பலாங்கொடை நகரம் தென்மாகாணத்தில் கீர்த்தி மிகு நகரமாக இருப்பதற்கு இது மாத்திரம் காரணமல்ல. போலி முகங்கள், பொம்மைகள், போன்ற பாரம்பரிய கலைகள் பலவற்றை கௌரவமாக தன்னகத்தே கொண்டுள்ளமையாகும். அவ்வாறான நகரில் ஒரு தசாப்தகாலமாக சேவைகளை வழங்கி வரும் பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவன மீன்பிடி போன்ற பாரம்பரியமாக ஈடுபட்டு வரும் கைத்தொழில்களையே பெரும்பான்மையாக கொண்டுள்ளமை இப்பிரதேசம் பிரசித்தி பெறுவதற்கு காரணமாகும். வேறு வகையில் பார்க்கும் போது போலி முகங்கள், பொம்மைகள், மர சிற்ப வேலைகள் போன்ற இப்பிரதேசத்துக்கு ஏற்ற வகையிலான கைத்தொழில்களில் ஈடுபடுவது விசேடத்துவம் மிக்க நகரமாக அம்பலாங்கொடை பிரதேசம் திகழ்கிறது. அதிலும் கருவாப்பட்டை கைத்தொழிலில் கரந்தெனிய, ஊருகஹ, படபொல போன்ற பிரதேசங்களில் அதிகளவான மக்கள் ஈடுபடுகிறார்கள்.
அம்பலாங்கொடை, ஹிக்கடுவ, பெந்தர போன்ற பிரதேச மக்கள் பெரும்பாலும் மீன்பிடி தொழிலையே விருப்பத்துடன் செய்து வருகிறார்கள். எமது அங்கத்தவர்களில் தொரல வரையிலுமான பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் பரவலாக காணப்படுகின்றன. 93 மத்திய நிலையங்கள் தற்போது காணப்படுகின்றன. இந்த மத்திய நிலையங்கள் ஊடாக சிறு கைத்தொழில் ஈடுபடும் கைத்தொழிலாளர்களை எமது நிறுவன அங்கத்தவர்களாக இணைத்துக் கொண்டு கடன் வழங்கப்படுகிறது.

எமது அங்கத்தவர்கள் பல்வேறு கைத்தொழில்களில் ஈடுபடுகிறார்கள். அவர்களுக்கு அந்தக் கைத்தொழிலை ஈடுபடவும் கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு தேவையான கடன் வசதிகள் மற்றும் ஆலோசனைகளையும் தொடர்ச்சியாக வழங்கி வருகிறோம். இன்று வரை எமது அங்கத்தவர்கள் 3458 பேருக்கு கடன் வழங்கியுள்ளோம். அவர்களின் கைத்தொழிலை சிறப்பாக மேற்கொள்ள இது வரையில் 378 மில்லியன் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட சேமிப்புத் திட்டமான யாலு லமா சிறுவர் சேமிப்பு கணக்கு, மியுலெசி வழங்கியுள்ளோம். அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உதவிக்காக ஆரம்பிக்கப்பட்ட அங்கத்தவர் மற்றும் கடன் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் மரணசகாய நிதி மற்றும் நஷ்டஈடு ஆகியவற்றுக்காக 37650000 ரூபா தொகையை கடந்த காலங்களில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எமது அங்கத்தவர்களின் கைத்தொழில் கொடுக்கல் வாங்களுக்கு மேலதிகமாக சமூக சேவையில் ஈடுபடுவதை நாம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தோம். மழைக்காலங்கள் என்று பார்க்காமல் இரவு பகல் என்றில்லாமல் நாம் செயற்படுவது எமது அங்கத்தவர்களின் வாழ்க்கையை உயர்த்தும் உன்னத நோக்கத்திற்காகும். இருந்தாலும் பல போட்டி நிறுவனங்கள் காணப்பட்டாலும் கடன் வழங்குகிறோம் என்பதற்காக சகலருக்கும் வழங்குவதற்கு தயாரில்லை. கடன் வழங்கி எமது அங்கத்தவர்களின் கழுத்துவரை உயர்த்த விரும்பவில்லை. அவர்களின் கைத்தொழிலுக்கு ஏற்ற வகையில் தேவையான அளவுக்கு சிறிது சிறிதாக கைத்தொழிலை உயர்த்தும் முன்னுரிரைம அளிக்கிறோம். இதன் கீழ் கடந்த காலத்தில் எமது அங்கத்தவர்களின் உயர்வுக்காக தலைமைத்துவ மற்றும் முகாமைத்துவ பயிற்சிகள் இரண்டு செய்யப்பட்டன. எதிர்காலத்தில் அவர்களின் ஒழுக்க நெறியை உயர்த்துவதற்காக வேலைத்திட்டமொன்றை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.
ஏனெனில் போட்டி உலகில் மனிதனின் செயற்பாடுகளில் கீழ்மட்டத்தை நோக்கி சென்றுக் கொண்டிருக்கிறது.
நிதி பரிமாற்றம் மற்றும் கைத்தொழிலில் உண்மைத்தன்மை மனிதனின் வளர்ச்சிக்கு மிகவும் பிரதான ஒன்றாக காணப்படுகிறது. இலங்கை மக்களின் வறுமையை போக்குவதற்காக பிரைம் கிராமின் நிறுவனம் எடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்தை அம்பலாங்கொடை பிரதேசத்தின் மூலம் நனவாக்குவதே எமது நோக்கமாகும். . .





பிரைம் கிராமின் அம்பலாங்கொடை கிளை ஊழியர்கள்

## பிரைம் கிராமின் அம்பலாங்கொடை கிளை உத்தியோகத்தர்கள்

**பிரதேச முகாமையாளர்**
**வசந்த சிறிவர்தன**
**கிளை முகாமையாளர்**
**மகேஸ் உதய**
**உதவி முகாமையாளர்**
**எம்.பி. எதிரிசிங்க**
**நிதிப் பிரிவு தலைவர்**
**மிலான் ஷாமிக்க**
**சிரேஷ்ட முகாமையாளர்**
**ரசிக்க தேசப்பிரிய**
**கணக்கு உதவியாளர்**
**திலான் சஞ்சீவ**
**கணக்கு உதவியாளர்கள்**
**சிந்தக குலசேகர**
**தர்ஷிகா நுவந்தி**
**சிரேஷ்ட நிறைவேற்று**
**நாலக்க பிரதீப்**
**தனுக உமேஷ்**
**ஷன்ன தயாபிரிய**
**சீ.எம். ஆட்டிகல**
**எம்.ஏ.ஏ. இந்திக்க**
**சஹன் ஹிம்ஹான**
**நுவன் ஜயசங்க**
**சஜித் ஜயமான்ன**
**திலினி சதரசிங்கீர**
**சமீர ரொட்ரிகோ**
**ஏ.எஸ்.ஹேமச்சந்திர**
**பீ.என். கமகே**
**இந்திக லால்**

**பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்**
**இல. 63,**
**காலி வீதி, அம்பலாங்கொடை**
**தொலைபேசி: 0912258946**
**மின்னஞ்சல்:**

ஆக்கம் -
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படப்பிடிப்பு
லக்ஷ்மன் குமாரதுங்க

# கிராமின் இலக்கை அம்பலாங்கொடை பிரதேசத்தின் ஊடாக அடைவதே எமது நோக்கமாகும் . . .

## பிரைம் கிராமின் அம்பலாங்கொடை கிளை

அம்பலாங்கொடை கிளையின் செயற்பாடுகள் தொடர்பில் இம்முறை நாம் உங்களுடன் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அம்பலாங்கொடை கிளையின் இலக்கு தொடர்பில் பதிலளிக்கும் கிளை முகாமையாளர் மகேஸ் சாந்த சில்வா அவர்கள் நேர்கண்டவரிடம் இவ்விதம் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.
பிரைம் கிராமின் கிளை பட்டியலில் 25ஆவது இடத்தில் காணப்படும் அம்பலாங்கொடை கிளை பிரைம் கிராமின் கிளை பட்டியலில் 2004ஆம் செப்டம்பர் மாதத்தில் இணைந்து கொண்டது. அன்று முதல் இன்று வரை செயற்பட்ட காலத்தில் இப்பிரதேச 3460 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு சேவை செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அம்பலாங்கொடை என்று கூறுவது ஏனைய பிரதேசங்களைவிட பாரம்பரிய கைத்தொழில்களுக்கு மிகவும் பிரசித்த பெற்ற பிரதேசமாக அடையாளம் காணப்படுகிறது. விசேடமாக கருவாப்பட்டை, தும்பு தொடர்பான கைத்தொழில், பெரும்பாலானவர்கள் தும்புடன் தொடர்புடைய தொழிலில் ஈடுபடுபவர்களே அதிகம். மாதம்பே, தேவகொட போன்ற பிரதேசங்கள் இத்தொழிலுக்கு பிரசித்த பெற்ற இடங்களாகும். பிரைம் கிராமின் அம்பலாங்கொடை கிளை 2004ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 696ஆம் இலக்க, காலி வீதி ரன்தொம்ப என்ற விலாசத்தில் இயங்கி வந்தது. 2012ஆம் ஆண்டு இல. 63, காலி வீதி என்ற விலாசத்தில் புதிய கட்டிடத்தொகுதியில் எமது வாடிக்கையாளர்களுக்கு மேலும் சிறப்பான சேவைகளை செய்யும் நோக்கில் இயங்க ஆரம்பித்தது. அம்பலாங்கொடை நகரில் இருந்து அதிகளவான பிரதேசங்களில் பரவலாக இருக்கும் எமது அங்கத்தவர்கள் இன்று வரை எமது நிதிச் சேவையைப் பெற்றுக் கொண்டுள்ளனர். விசேடமாக எமது மத்தியநிலையங்கள் அம்பாலாங்கொடையில் இருந்து கொழும்பு வீதியின் அளுத்கம வரையிலும் காலி வீதியில் ஹிக்கடுவ வரையிலும், அல்பிட்டி வீதியின் மாபாலகம வரையிலும் கஹுவ பகுதியில் வடபொல மகளிர் சேமிப்பு கணக்கு மற்றுழ் பிரைம் சேமிப்பு கணக்கு ஆகிய கணக்குகளும் அளமுத கிளையில் காணப்படுகின்றன.
அங்கத்தவர்களுக்கு நாளாந்தம் ஏற்படும் உடனடி கடன் திட்டத்தின் கீழ் “நிவாரணக் கடன்” எமது அங்கத்தவர் பிள்ளைகளின் கல்விக்கு ஏற்படக்கூடிய செலவினங்களை ஈடுசெய்வதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் கடந்த காலங்களில் மாத்திரம் 37 மில்லியன் ரூபா வரை நிவாரணக் கடன் அடிப்படையில் நாம் வகையில் அவர்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. இதனால் பிரைம் கிராமின் நிறுவனம் தொடர்பாக எமது அங்கத்தவர்களிடையே நல்ல நம்பிக்கை காணப்படுகிறது. கொடுக்கல் வாங்களுக்கு அப்பால் சமூக சேவைகள் வேலைத்திட்டத்திற்கு நாம்

| மத்திய நிலையங்கள் | அங்கத்தவர் எண்ணிக்கை | ஊழியர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் அளவு ரூபா |
|---|---|---|---|
| 93 | 3458 | 17 | රු. මි. 378 |



**வசந்த சிறிவர்தன**
**பிரதேச முகாமையாளர்**



**மகேஸ் உதய**
**கிளை முகாமையாளர்**



**மகேஸ் உதய**
**கிளை முகாமையாளர்**



**மிலான் ஷாமிக்க**
**நிதிப் பிரிவு தலைவர்**



**ரசிக்க தேசப்பிரிய**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**எப்போதும் முன்னோக்கி செல்ல வேண்டுமென்பதுடன் கீழ்நோக்கி செல்வதையும் அறிந்திருக்க வேண்டும்**

# எமது தொழில்முயற்சிக்கு தேவையானதை பெற்றுக் கொள்ள பிரைம் கிராமின் நிறுவனம் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது

நாங்கள் நன்னீர் மீன்பிடி கைத்தொழிலை பாரம்பரியமாக மேற்கொண்டு வருகிறோம். 20 வருடமாக இந்தத் தொழிலை செய்து வருகிறோம். அதிகமாக கடல்நீரேரி பகுதியில் இறால்களை பிடிப்பதே எங்கள் தொழிலாகும். இதற்கு மேலதிகமாக வலைகளை வீசியும், பாரிய வலைகளைப் பயன்படுத்தியும் மீன்களை பிடிப்போம். இந்தத் தொழிலை செய்யும் போது இறால்களை பிடிப்பதற்காக பாரிய செலவுகள் செய்ய வேண்டும். குழாய், மரம், நைலோன் ஆகியனவும் தேவைப்படுகின்றன. சிறு கைத்தொழிலில் ஈடுபடும் எம்போன்ற முயற்சியாளர்களுக்கு கடன் வழங்கும் நிறுவனங்கள் மிகவும் குறைவாக காணப்படும் இக்காலப்பகுதியில் பிரைம் கிராமின் நிறுவனம் எமக்கு தேவையான கடனை பெற்றுக் கொடுக்க முன்வந்தமை எமது அதிஷ்டமாகும். சிறுகடன்களை வழங்கும் நிறுவனங்கள் பல உள்ளன. பிரைம் கிராமின் நிறுவனத்துடனான கொடுக்கல் வாங்கல் இன்றுவரை சிறப்பாக முன்னெடுப்பதற்கு நிறுவன உத்தியோகத்தர்களின் அன்பான ஆலோசனைகள் உட்பட அந்நியொன்ய தொடர்புமே காரணமாகும். அவ்வாறே தொழில்முயற்சியை சிறப்பாக முன்னெடுக்க கிராமின் நிறுவனம் மிகவும் அர்ப்பணிப்பும் அளப்பரியதாகும்.

டபிள்யு.பிரேமவதி
ஹினத்திய,
பலபிட்டிய.




## சொத்துக்களை காண்பிடிக்காமல் பிரைம் கிராமின் நிறுவனத்தினால் இலகுவாக கடனைப் பெற்றுக் கொள்ள முடியும்



இந்தப் பிரதேசத்தில் அதிகளவான மக்கள் கறுவப்பட்டை கைத்தொழிலில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இந்தத் தொழிலை பாரம்பரியமாக இப்பகுதி மக்களால் செய்யப்பட்டு வருகின்றது. அவ்வாறே வருடத்தில் குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் மாத்திரமே இந்தத் தொழிலில் ஈடுபட முடியும். விசேடமாக மார்ச் மாதத்தில் இருந்து சில மாதங்களுக்கு செய்ய முடியும். எனக்கு பட்டை உற்பத்தி செய்யும் இடமில்லை. ஆனால், நாங்கள் ஒரு ஏக்கரில் அரை ஏக்கர் வரை காணப்படும் பட்டை மரத்தை விலை கொடுத்து வாங்கி அதிலிருந்து பட்டையை கழற்றி எடுத்துக் கொள்வோம். இந்தத் தொழிலுக்கு தேவையான பணத்தை பிரைம் கிராமின் நிறுவனத்திடம் இருந்து பெற்றுக் கொண்டோம். சிறிய தொழில் முயற்சியாளர்களான எங்களுக்கு வங்கியொன்றில் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு சொத்துக்களை காண்பிக்க வேண்டும். ஆனால், பிணையாளியோ அல்லது சொத்துக்களையோ காட்டாமல் பிரைம் கிராமின் நிறுவனத்தினால் இலகுவாக கடனைப் பெற்றுக் கொள்ளலாம். இதனால், எவ்வித பிரச்சினையும் இன்றி இந்தத் தொழிலை செய்யக்கூடியதாக இருக்கிறது. அவ்வாறே வாராந்தம் செலுத்தும் கடன் தொகை என்பதால் எமக்கு தெரியாமலே கடன் தொகையை செலுத்தி முடிக்கக்கூடியதாக இருக்கிறது.

பீ.ரி. ஸ்ரீயா மல்காந்தி கிரிபெத்த அகனகெட்டிய

## எமக்கு தெரியாமல் சுமையின்றி விரைவாக கடன் தொகையை செலுத்தி முடிக்கலாம்



நான் ஆரம்பத்தில் தொழில் ஒன்றை செய்தேன். பின்னர் அதிலிருந்து விலகி வீட்டில் இருக்கும் போது, ஏதாவது சுயதொழில் ஒன்றை செய்தால் நன்றாக இருக்குமென்று தீர்மானித்தேன். அதே எதிர்பார்ப்பில் இருந்த போது தான் கன்னொருவ விவசாய பயிற்சி நிலையத்தில் காளான் உற்பத்தி பாடநெறி ஆரம்பிக்கப்படுவது தொடர்பாக புதினப் பத்திரிகையில் விளம்பரமொன்று காணப்பட்டது. நான் அந்த பாடநெறியை பூர்த்தி செய்து அவர்கள் கற்றுக் கொடுத்ததைப் போன்று காளான் உற்பத்தியை செய்ய ஆரம்பித்தேன். வியாபாரமொன்றை ஆரம்பிக்க தேவையான பணத்தை தேடிக் கொள்வதில் ஏற்பட்ட பிரச்சினைக்கு பிரைம் கிராமின் நுண் நிதி கடன் திட்டம் தீர்வாக அமைந்தது. நான் ஆரம்பத்தில் 5000 கடனைப் பெற்று பின்னர் 10,000, 15,000 என்று கடனைப் பெற்றுக் கொண்டேன். காளாண்களை பொதி செய்து முச்சக்கர வண்டியின் ஊடாக கடைகளுக்கு சந்தைப்படுத்தியதும் நான்தான். கிராமின் நிறுவனம் வியாபாரத்தை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்கு தேவையான ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கியது. அடுத்ததாக கடனை மீண்டும் செலுத்தும் முறையானது எமக்கு எவ்வித சுமையுமின்றி இலகுவாக கடனை விரைவாக செலுத்துவதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாகும்.

சுவர்ணா ஹேமமாலி லியனகே தொரணாகொட பெம்முல்லை.

## கலைகத்துறை மேம்பாட்டுக்கும் பிரைம் கிராமின் உதவிகளை செய்கிறது. . . .



அம்பலாங்கொடை என்று கூறியதும் எமது ஞாபகத்துக்கு வருவது பொம்மைகளாகும். சான்றோர்களினால் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கலையானது பாரம்பரியமாக தொடர்ந்து செய்யப்பட்ட கலையாகும். இந்த பொம்மைக் கலை தற்போது அழிவினை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் கலையாக மாறியுள்ளதா என்ற சந்தேகம் வரும் அளவுக்கு பொம்மைக் கலையை ஒரு சிலரே இன்றும் கைத்தொழிலாக செய்து வருகிறார்கள். அந்த வகையில் கன்வாரி நிமல் மற்றும் கே.பி.காந்தி தம்பதிகளுக்கே முதலிடமாகும். பிரைம் கிராமின் அம்பலாங்கொடை கிளை அங்கத்தவரான திருமதி கே.பி. காந்தி தங்களின் வாழ்வாதார தொழிலாக பொம்மைக் கைத்தொழிலை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாகவும் பிரைம் கிராமின் நிறுவனம் வழங்கி வரும் பங்களிப்பு தொடர்பாகவும் பின்வருமாறு தெரிவித்தார். “இங்கு ஆடும் பொம்மைகள் பலவற்றை நாமே உற்பத்தி செய்துள்ளதுடன் இவை எமது தந்தை, தாத்தாமார் அக்காலப்பகுதியில் செய்தது போன்ற பொம்மைகளும் காணப்படுகின்றன. இந்தத் துறையில் ஈடுபடும் போது தொடர்ச்சியாக பணம் தேவைப்படும். விசேடமாக பொம்மைகள், விசித்திர முகங்கள் வெட்டுதல், துணிகள் வாங்குவதல் போன்ற உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவும் இந்தக் கலையை தொடர்ந்து மேற்கொள்ள நாளாந்தம் ஏற்படும் செலவுகளை ஈடுசெய்வதற்காக நான் பிரைம் கிராமின் நிறுவனத்தில் அங்கத்தவராக இணைந்து கொண்டேன். இவ்வாறான தொழில்களில் ஈடுபடும் போது வங்கிகள் கடனை வழங்குவதற்கு விரும்புவதில்லை. என்றாலும் பிரைம் கிராமின் நிறுவனம் அந்தக் குறையை நிவர்த்தி செய்து எம்போன்ற ஏழைக் கலைஞர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

கே.பி. காந்தி, போகாவத்த
அம்பலாங்கொடை

**எங்களால் எதனையும் செய்ய முடியுமென்பதுடன் முடியாது என்ற ஒன்றில்லை**



பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்களுடனான நேர்காணலை கீழே தருகின்றோம்

Micro Finance எண்ணக்கரு சிறப்பு பார்வை

# மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்தின் ஆரம்பமும் நடைமுறையும் பகுதி 4



## கிராமிய வங்கி முறையின் குறைபாடுகள் மற்றும் நன்மைகள்

கலப்பு முறையாக ஆரம்பிக்கப்பட்ட கிராமிய வங்கி முறை மற்றும் அதன் உள்ளடக்கம் தொடர்பாக கடந்த வார மெஹேவர சஞ்சிகையில் தெரிவித்திருந்தோம். அதன் நன்மை மற்றும் இந்தத் திட்டத்தின் குறைபாடுகள் சிலவற்றை நாம் இங்கே அறிமுகப்படுத்த விரும்புகிறோம்.

கிராமிய வங்கி முறையில் கொடுக்கல் வாங்கல் செய்வோரே அதன் உரிமையாளராக இருப்பதால் நிதி நிர்வாகத்தில் சில முறைகேடுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பது இதன் பாரிய குறைபாடாகும்.

கொடுக்கப்படும் கடன் அளவு குழுவினால் தீர்மானிக்கப்படுவதும் பாரிய குறைபாடாகும். இதனால் கடன் பெறுபவரின் அளவு கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. மீண்டும் செலுத்துவது தொடர்பாகவும் பிணை வழங்குபவர் தொடர்பாகவும் கடன் கொடுப்பவரினால் பார்க்கப்படுகிறது. அவ்வாறே, குழுவினால் கடன் பெறுவது கவனத்தில் எடுக்கப்படாமல் வழங்கப்படும் கடன் தொகை தொடர்பாக அந்தக் குழுவே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

குழு ஒற்றுமையாகவும் வலுவானதாகவும் இருக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே இந்த திட்டம் வெற்றியளிக்கும் என்பது பிரதான விடயமாகும். அவ்வாறே, குழுக்களிடையே காணப்படும் ஒருமைப்பாடு, ஒவ்வொருவரிடம் காணப்படும் பொறுப்பு ஆகிய காரணங்கள் குழு முறையை வலுப்படுத்தி முன்னெடுத்துச் செல்வதற்கு பிரதான காரணமாக அமைகிறது. மேலும் குழுவில் பொருத்தமில்லாதவர்கள் இணைந்து கொள்ளும் போது பிற்காலத்தில் குழு முறைமை தோல்வியை நோக்கி செல்வதற்கு காரணமாக இருக்கும். ஒவ்வொரும் தங்களது கைத்தொழில் தொடர்பில் அதிக அக்கறை காட்டுவதால் கடன் வழங்கிய கிராமின் 02 முறையானது பிற்காலத்தில் அசாதாரண நிலைக்கு தள்ளப்படும்.

கிராமிய வங்கி முறையை சகலரும் ஏற்றுக் கொள்ளாமைக்கான இன்னுமொரு காரணமாக இருப்பது மனிதர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் மனமுடைவதுடன் எவ்வித பொறுப்புமின்றி செயற்படுவதால் சிறந்த சமூகமொன்றை உருவாக்க முடியாமல் குழுக்களில் இருந்து விலகிச் செல்வதாகும். இறுதியில் கிராமின் குழு முறையில் சரியான முடிவுகளை எடுப்பதற்கோ அல்லது செயற்பாடு தொடர்பாக பொறுப்புடன் செயற்பட முடியாத அங்கத்தவர்களினாலாகும்.

இவ்வாறான சூழலுக்கிடையில் அந்தக் கடன் பெற்றவர் குழுக் கடனைப் மீளப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதுடன், எந்த அடிப்படையிலாவது பெற்றுக் கொண்ட கடனை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக கிராமிய வங்கிகள் செயற்பட வேண்டியுள்ளது. இவ்வாறான சூழலில் நிறுவனம் அல்லது குழுக்களிடையில் நிதி நெருக்கடி நிலைமை ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

குழு கடன் திட்டத்தின் குறைபாடுகள்

* நிபந்தனைகள் காணப்படல்
* பெயரளவில் மாத்திரமே இருத்தல்
* சமூகத்தில் ஏற்படக்கூடிய அழுத்தம் அதாவது கிராமிய கடன் முறையில் கடன் பெறுவதை விட வட்டிக்கு கடன் வழங்கும் நபர்களிடம் இருந்து பணத்தை பெற்றுக் கொள்ளுமாறு சமூகத்தில் பாரிய அழுத்தங்களை கொடுத்தல். இவ்வாறான சம்பவங்கள் சமூகத்தில் பரவலாக காணப்படுகிறது.
* கடன் வழங்கும் போது நபரின் தனிப்பட்ட வருமான மட்டம். கைத்தொழிலின் நிலைமை, நிதி முதலீடு செய்வதற்கான வாய்ப்பு போன்ற நிலைமைகள் தொடர்பாக குழுக்கள் உண்மையான தகவல்களை வெளியிடுவதால் தனிநபரின் அந்தரங்கம் வெளிவருவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.
* குழுக்களின் கூட்டங்களுக்கு சமூகமளித்தல் மற்றும் அதற்காக அதிக நேரத்தை செலவிடவேண்டிய நிலை ஏற்படல்.
* குழுக்களின் மூலம் கடனைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தரும் சிலர் பல்வேறு காரணங்களுக்காக வீணாக நேரத்தைக் கடத்தும் சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். இவ்வாறான சம்பவங்கள் குழுக்கள் ஊடாக பெற முடியும் என்ற நம்பிக்கையில் வரும் நபர்களுக்கு மனோ ரீதியில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துவதால் வட்டி முதலாளியிடம் இலகுவாக கடனைப் பெறுவதற்கான அடிதளம் இடப்படுகிறது.
* குழு முறையில் அந்தக் குழுவின் அங்கத்தவர்கள் தங்கள் குழுவின் கடன் பெறுபவர்களுக்காக பிணையாளியாக இருக்க வேண்டும். இதில் மிகவும் குறைந்த கடன் பெறும் நபருக்கும் மிகப் பெரிய அளவில் கடன் பெறும் நபரின் பிணையாளியாக இருக்க வேண்டும்.

கிராமிய வங்கி முறையை நடைமுறைப்படுத்தும் சில போட்டி நிறுவனங்கள் கொடுக்கல் வாங்களில் ஈடுபடுபவர்களை கவர்ச்சிகரமாக்குவதற்காக இந்த முறையில் பின்பற்றப்படும் மிகவும் முக்கியமான அங்கம் மற்றும் நிபந்தனைகளை புறந்தள்ளும் நிலைமையையும் காணக்கூடியதாக இருக்கிறது. இதன் மூலம் கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டிய நிதி ஒழுங்கு, ஒருமைப்பாடு, பொறுப்புணர்ச்சி என்பவற்றுக்கு பாதகம் ஏற்படுவதுடன் மைக்ரோ பினான்ஸ் முறைமையை நடைமுறைப்படுத்த தடைகள் உருவாக்கப்படுகின்றன. இவை நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகும்.

சமூகத்தின் வகுப்பு மற்றும் சாதி என்பன காணப்படுவதால் இந்த முறையை சமூகத்தில் முன்னெடுப்பதில் பாரிய சிக்கல் நிலை காணப்படுகின்றது. காரணம் சமூகத்தில் உயர் நிலையில் இருப்பதாக கூறுவோரினால் சமூகத்தில் கீழ் இருப்பவர்களை தங்களது குழுவில் இணைத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை.

இவ்வாறான குறைபாடுகள் பலவற்றை நாம் சுட்டிக்காட்டினாலும் கிராமிய வங்கி முறையில் காணப்படக்கூடிய நன்மையான விடயங்கள் பலவும் காணப்படுகின்றன. அவ்வாறான விடயங்களை அடுத்த மெஹேவரயில் வெளிப்படுத்துவோம்.



# கிராமின் சக்தி

# அவரின் வளர்ச்சி

நோக்கமின்றி ஆரம்பிக்கப்படும் எந்தவொரு திட்டமும் வெற்றியளிப்பதில்லை. மனமிருந்தால் எந்தவொரு விடயமும் சிறியதாக தோன்றுமென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. காலம், நேரத்தை பார்த்தல், முதலீடு தொடர்பான பிரச்சினை, இடமொன்றை தேடுதல் . . . ஆகிய விடயங்கள் உள்ளத்தில் இருக்கும் போது அது சிறிய பிரச்சினையாகும். வாழ்க்கையில் அநேக விடயங்களுக்கும் பொருத்தமான நிகழ்ச்சி நிரல் வியாபாரத்துக்கும் பொதுவானதாகும். வியாபாரமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று உள்ளார்ந்தமாக எழ வேண்டும். எப்படியோ ஆரம்பிப்பேன் என்று அதிர்ஷ்டம் கைகொடுக்கும் என்ற உணர்வுடன் ஆரம்பித்து பின்னர் கைசேதப்படும் நிலைக்கு தள்ளப்படும் போதுதான் அதன் விளைவு தெரியும். ஷிராணியின் கடந்த கால வாழ்க்கையில் இடம்பெற்ற சில விடயங்கள் துரதிஷ்டமானது என்பதை நாங்கள் கண்டுகொள்ளக்கூடியதாக இருந்தது. மௌமாக கேட்டுக் கொண்டிருங்கள் . . . கீழே தரப்படும் விடயங்கள் அவளது வாழ்க்கையில் உண்மையாக இடம்பெற்றது என்பதை எங்களுக்கு தெரிவித்தார்.

எனது பிறந்த இடம் அம்பலாங்கொடை. எனது தந்தை பேக்கரி தொழிலை செய்து வந்தார். எனக்கு சகோதர, சகோதரிகள் மூவர் இருந்தனர். எனது அம்மா எந்தவொரு தொழிலும் செய்யவில்லை. எனது தந்தை செய்த தொழில் எங்களுக்கு போதுமானதாக இருந்ததால் தாய் தொழில் செய்யவில்லை. உயர்தரம் வரை கல்வி கற்றேன். நான் 1992ஆம் ஆண்டு திருமணம் செய்தேன். எனது கணவர் பொலிஸ் நிலையத்தில் தொழில் புரிந்தார். யுத்தம் கொடூரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் எனது கணவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் இருந்தார். இடமாற்றம் இன்றி பலகாலமாக வடக்கில் தொழில் செய்து வந்த கணவர், பின்னர் தொழில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்தார். அப்போது நாங்கள் இடம்தொட்ட என்ற இடத்தில் வீடொன்றை கட்டி அங்கேயே குடியேறினோம். கணவர் தொழிலில் இருந்து விலகி முச்சக்கர வண்டியொன்றை செலுத்த ஆரம்பித்தார். அந்தக் காலத்தில் தான் சுனாமி ஏற்பட்டது. சுனாமியால் எனது தந்தையும் உயிரிழந்தார். காலி வீதி, அம்பன்கொட என்ற இடத்தில் இருந்த எங்களது பேக்கரியும் முற்றாக சேதமடைந்து அழிவுக்குள்ளானது.

அந்த அழிவு எங்கள் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை ஏற்படுத்தியது. மனோ ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் வாழ்க்கையில் பிரச்சினைகள் ஏற்பட்டன. விசேடமாக எமது பேக்கரி முற்றாக அழிவுற்றமையால் எமக்கு அதில் இருந்த வந்த வருமானம் தடைப்பட்டது. முச்சக்கர வண்டியை ஓட்டி குடும்பத்தை கொண்டு செல்வதில் எமக்கு பாரிய பிரச்சினை ஏற்பட்டதால் ஏதாவது ஒரு வகையில் வருமானத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தோம். எங்களின் வீடு அக்காவின் வீட்டுக்கு அருகிலேயே இருந்தது. அக்காவுக்கு கயிறு திரிக்கும் நிலையம் ஒன்று இருந்தது. நான் சிறிதாக தும்புகளை சேகரித்து கயிறு திரித்து அதனை எனது அக்காவிடம் விற்பனை செய்து சிறிய வருமானமொன்றை பெற்று வந்தேன். முதலில் தொழிலை ஆரம்பிப்பதற்கு என்னிடம் பணம் இருக்கவில்லை. சில வேளைகளில் நான் கடனுக்கு தும்பை பெற்ற சந்தர்ப்பமும் உண்டு. எனினும் கைத்தொழில் ஒன்றை செய்ய வேண்டுமென்று ஆர்வம் என்னிடம் இருந்தது. அந்த அதிர்ஷ்டத்தின் மத்தியில் எனக்கு முதலீடாக இருந்தது அன்பானவர்களே, எனது அன்பானவர்களின் பங்களிப்புடன் தும்புகளை கொண்டு வந்தேன். இவ்விதம் சில காலம் தொழிலில் ஈடுபட்டு பின்னர் கயிறு திரிக்கும் சிறிய இயந்திரம் ஒன்றை தயாரித்துக் கொண்டேன். இவ்விதம் தொழில் செய்து கொண்டிருக்கும் போது 2005ஆம் ஆண்டு கிராமின் சிறிய வியாபாரிகளுக்கு கடன் வழங்கும் நிறுவனம் தொடர்பாக நான் தெரிந்து கொண்டேன். கடன் பெறும் போது வழங்கப்பட வேண்டிய சொத்து மற்றும் பிணையாளிகள் இன்றி இருந்த எனக்கு கிராமின் கடன் திட்டம் தொடர்பாக பாரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டது.

## முடியுமென்ற நம்பிக்கை இருந்தால் முடியாதது எதுவுமில்லை என்று நான் நினைக்கிறேன் . . .

### ஷிராணி மெண்டிஸ் - அம்பலாங்கொடை கிளை



நான் கிராமின் அங்கத்தவராக இணைந்து கொண்டு முதன் முதலில் 25,000 ரூபா கடனைப் பெற்றுக் கொண்டேன். அந்த பணத்தைக் கொண்டு ஒரே தடவையில் அதிகளான தும்புகளை வாங்கி வந்தேன். நேர, காலம் பார்க்காமல் தொடர்ச்சியாக நான் எனது முயற்சியை செய்து வந்தேன். காலை 6.30 மணிக்கு எனது தொழிலை ஆரம்பித்தால் மாலை 7.00 – 8.00 மணி வரை தொழில் செய்த காலங்களும் உண்டு. அவ்விதம் கஷ்டப்பட்டு வேலை செய்து ஒருவரை தொழிலில் இணைத்துக் கொள்ளும் வகையில் எனது கைத்தொழிலை வளர்ச்சியடையச் செய்தேன். கைத்தொழிலுக்கு தேவையான வகையில் நான் பிரைம் கிராமின் நிறுவனத்திடம் இருந்து கடன் பெற்றுக் கொண்டேன். அந்தப் பணம் முழுவதையும் தேவைக்கேற்ப பயன்படுத்தி எனது கைத்தொழிலை செய்து வந்தேன். தும்பு கைத்தொழிலில் வளர்ச்சியடைந்த நான் வேறு ஏதேனும் தொழில் ஒன்றை செய்ய வேண்டுமென்று தீர்மானித்தேன். அதனடிப்படையில் மிளகாய் அரைக்கும் நிலையமொன்றை ஆரம்பித்தேன். இந்த நிறுவனத்துக்கு தேவையான பொருட்களை வாங்குவதற்கு நான் பிரைம் கிராமின் நிறுவனத்தில் கடன் பெற்றேன். தற்போது கிராமத்தில் உள்ள பலர் மிளகாய்த்தூள், மசாளாத்தூள் ஆகியவற்றை என்னிடமே வாங்குகின்றனர். மிளகாய் நிறுவனத்தை செயற்படுத்திக் கொண்டிருக்கும் போதே நான் இந்த பொருட்களை பக்கற்றில் அடைத்து விற்பனை செய்தால் நன்றாக இருக்குமென்று தீர்மானித்தேன். அவ்வாறு நினைத்தது மாத்திரமல்ல அதனை வெற்றிகரமாக ஆரம்பித்தேன். "ஷிராணி புரடக்ட்" என்ற பெயரில் நாம் தயாரிக்கும் பொருட்களை எனது கணவரின் முச்சக்கரவண்டியின் ஊடாக கடைகள், ஹோட்டல்கள், சாப்பாட்டு நிலையங்களுக்கு விநியோகித்து வருகிறோம். அந்த கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கும் பிரைம் கிராமின் நிறுவனம் கடனுதவி வழங்கியது.

கிராமின் நிறுவனத்தில் ஒன்றரை இலட்சம் ரூபா கடன் பெற உத்தேசித்துள்ளேன். இந்த பணத்தின் மூலம் இந்தத் தொழிலை மேலும் முன்னேற்றுவதற்கு எதிர்பார்க்கிறேன். நான் தற்போது தும்புக் கைத்தொழிலுக்கு புதிதாக ஆட்களை நியமித்து உற்பத்தி செய்து வருவதுடன் மிளகாய் தூள் அரைப்பதில் நான் முழுமையாக ஈடுபட்டு வருகிறேன். என்னிடம் ஐந்து பேர் தொழில் புரிகின்றனர். நான் டிதனை ஆரம்பித்ததை நினைத்தால் எல்லாம் கனவு போன்று காணப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் செய்ய வேண்டுமென்ற ஆசை இருந்தால் எதுவும் செய்யலாம் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். தேவை உள்ள நபர்கள் அந்த இலக்கை அடைய இயற்கையாகவே மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் தாமாகவே முன்வர வேண்டும். எமது வாழ்க்கைக்கு இலக்கை நிர்ணயித்த அந்த இலக்கை வெற்றிகரமானதாக்க கைகொடுத்தது பிரைம் கிராமின் நிறுவனமாகும். எம்மை உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கு பிரைம் நிறுவனம் சக்தியாக இருப்பது நாம் பெற்ற பாக்கியமாகும்.



ஆக்கம்
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படம் - லக்ஷ்மன் குமாரதுங்க

# உங்களுக்கு தெரியாத நான்













## எனது உள்ளத்துக்கு இயலாமை என்ற உணர்வு முதன் முதலில் ஏற்பட்டது

### ரஞ்சன் தர்மகீர்த்தி
### கிளை முகாமையாளர்
### புத்தளம் கிளை



**முழுப் பெயர்:** கரோலிஸ் ரஞ்சன் தர்மகீர்த்தி

**பிறந்த திகதி:** 1981.06.20

**பாடசாலைக் காலத்தில் உங்களுக்கு விருப்பமான பாடசாலை:** நான் நான்கு பாடசாலைகளில் கல்வி கற்றேன். எனது தந்தையின் கிராமம் குருநாகலை. அதனால் நான் முதலில் மா/கிவுல்கஸ்கொடுவ ஆரம்ப வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். அது ஒரு சிறிய பாடசாலையாகும். வீட்டிலிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள அந்தப் பாடசாலைக்கு நாங்கள் நடந்தே சென்றோம். பாடசாலைக்கு வந்த அனேக மாணவர்கள் கலர் உடைகளையே அணிந்து வந்தனர். பாடசாலை சீருடை இல்லாமையால்தான் அவர்கள் அவ்வாறு அணிந்து வந்தனர். அந்தப் பாடசாலையில் தரம் 2 வரை கற்றேன். தரம் 2இற்கு பிரகு வேறு இடத்துக்கு மாற்றலாகி சென்றோம். அடுத்ததாக கோ.மாலபே முன்னணி ஆண்கள் கனிஷ்ட வித்தியாத்திற்கு சென்றேன். அப்போது நாங்கள் சின்னம்மாவின் வீட்டிலேயே தங்கியிருந்தோம். சின்னம்மாவின் வீட்டிலிருந்து தொழில் ஒன்றை பெற்றுக்கொள்ள முடியுமென்ற நோக்கத்திலேயே தந்தை அங்கு வந்தார். எனினும் நாளாந்த செலவுக்கு கூட பணத்தைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கினார். இதனால் எனது தாய் தொழிலொன்றுக்கு செல்லவதற்கு தீர்மானித்தார். எங்களைப் பராமரிப்பதற்கு எவரும் இல்லாதமையால் நாங்கள் புத்தளத்தில் உள்ள ஆச்சியின் வீட்டுக்கு செல்ல வேண்டியேற்பட்டது. தரம் 6இல் இருந்து க.பொ.த. சாதாரண தரம் வரையில் புத்தளம் ஆனந்தா கல்லூரியில் கல்வி கற்றேன். எனக்கு மிகவும் விருப்பமான பாடசாலை இதுவாகும். என்றாலும் பாடசாலை மாறுவது இதனுடன் நின்றுவிடவில்லை. சாதாரணத்தில் சிறந்த பெறுபேற்றை பெற்றதால் கணிதத்துறை உயர்படிப்புக்காக மாதம்பை சென்றல் கல்லூரிக்கு செல்ல வேண்டியேற்பட்டது.

**விளையாட்டு:** கிரிக்கட் விளையாட்டு எனக்கு மிகவும் பிடிக்கும். என்றாலும் நான் பாடசாலை நாட்களில் குறுந்தூர ஓட்ட வீரனாக இருந்தேன்.

**பாடசாலை நாட்களில் மறக்க முடியாத நிகழ்வுகள்:** அப்போது நான் தரம் 4இல் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். சின்னம்மாவின் வீட்டில் இருந்த போது எங்களுக்கு தென்னை ஓழைகளைப் பயன்படுத்தி சிறிய வீடொன்றை நிர்மாணித்து கொடுத்தார்கள். ஒரு நாள் சிறிய குப்பி விளக்கு சாய்ந்து முழு வீடும் தீயினால் சேதமடைந்ததுடன் அதில் இருந்த பெறுமதியான பொருட்களும் அழிவடைந்தன. எமக்கென்று இருந்த உடைகளும், புத்தகங்கள் அனைத்தும் தீயினால் சாம்பலாகிவிட்டன. கஷ்டமான காலத்தில் நெருப்பில் விழுவதைப் போன்ற அந்த நிகழ்வினால் எமக்கு பாடசாலை மாணவர்களினால் உடு துணிமணிகள், பாடசாலை அப்பியாசக் கொப்பிகள், புத்தகப் பைகள் என்பன பாரிய அளவில் கிடைத்தன. எனக்கு அப்போதுதான் மற்றவர்களின் ஒத்துழைப்பு என்ன என்பதை உணர்ந்து கொண்டேன்.

**பாடசாலைக் காலத்தில் பெரியவராக வந்தததும்:** உயர்தரம் கற்றுக் கொண்டிருந்த போது பல்கலைக்கழகத்திற்கு சென்று பொறியியலாளராக வரவேண்டுமென்ற எண்ணம் இருந்தது. எனினும் நான் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்காததால் அந்தக் கனவு நிறைவேறவில்லை.

முதல் தொழிலைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட சிரமங்கள்: நாங்கள் பல்வேறு பொருளாதார கஷ்டங்களுக்கு மத்தியில் கல்வி கற்றோம். இதனால், உயர்கல்வியை முடித்தவுடன் தொழில் ஒன்றை பெறவேண்டிய நிர்ப்பந்தம் காணப்பட்டது. இதனால், தலாஹேன பகுதியில் சில்லறைக் கடையொன்றில் சிறிய சம்பளத்துக்கு தொழில் ஒன்றை செய்தேன். எனினும் அங்கு கஷ்டப்பட்ட அளவுக்கு வெகுமதி கிடைக்கவில்லை. நான் சம்பளம் பெறாமலே அந்த இடத்தில் இருந்து விலகிவிட்டேன். இதன் பின்னர் எங்கள் மாமாவிடம் தச்சுத் தொழிலை கற்றுக் கொண்டேன். அதன் பின்னர் எராஜ் அவர்களின் ஊடாக 2003ஆம் ஆண்டு பிரைம் கிராமின் நிறுவனத்தில் அலுவலக உதவியாளராக இணைந்து கொண்டேன். அந்தத் தொழிலில் இருந்தவாறு பல்வேறு பதவிகளை படிப்படியாக வகித்து என்னால் இயன்றளவு கம்பனிக்காக உழைத்தேன். இன்று நான் கிளை முகாமையாளர் பதவிக்கு வரும் வரை நான் நிறுவன வளர்ச்சிக்கு செய்த தியாகங்களும் அர்ப்பணிப்புகளும் வாய்ப்புகளும் சான்றாகும் என்பதை உணர்கிறேன்.

வாழ்க்கையில் மிகவும் சந்தோஷமான நாட்களும், சோகமான நிகழ்வும்? எனது வாழ்வில் மிகவும் சந்தோஷமான நிகழ்வாக கருதுவது எனது மகள் மல்மி காவியா பிறந்த தினமாகும். அவ்வாறே 2008ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் திகதி எனது தாயார் எங்களைவிட்டு மறைந்த தினம் எனது வாழ்வில் மிகவும் சோகமான தினமாகும். எங்கள் வாழ்க்கையை உயர்த்துவதற்காக எனது தாயார் செய்த துன்பங்கள் அளப்பரியது.

**கடந்த காலத்துக்கு செல்வதற்கான வாய்ப்பொன்று கிடைத்தால் நீங்கள் தெரிவு செய்யும் சிறந்த காலமும் அதற்கான காரணமும்:** உயர்தரம் கற்ற காலப்பகுதியாகும். உயர்தர பரீட்சையில் நான் சிறப்பான பெறுபேறுகளை பெற முடியாததை இன்றும் நான் கவலையாக கருதுகிறேன். எனக்கு அவ்வாறான வாய்ப்பு கிடைத்தால் தவறுகளை மீள்பரிசீலனை செய்து சிறப்பான பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்வேன்.

சரி செய்ய வேண்டுமென நினைக்கும்

நான் ஒரு விடயத்தை செய்வதற்கு முன் பல தடவைகள் பரீட்சித்து பார்ப்பேன். இதனால் சில விடயங்களை தவிர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் பல விடயங்களை விட்டுக் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

**உங்கள் வாழ்வில் முன்மாதிரியான நபராக கருதக்கூடிய ஒருவர் யார்?** எனது தந்தை. அவர் அந்தளவு கல்வி அறிவு இல்லாதவராக இருந்தாலும் சமூகத்தில் பெற்றுக் கொண்ட அனுபவங்களை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திய நபராகும். எனது தந்தை ஒருபோதும் மற்றவர்களை மனம் வருந்தும் வகையில் பேசியது கிடையாது. எங்களுக்கு நல்ல விடயங்களை கற்றுக் கொடுத்ததுடன் எங்களை அன்புடன் வழிநடாத்தினார்.

**முதல் காதல் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கம்:** மனதில் தோன்றிய காதல் உணர்வு அவ்வாறே மனதில் நிறுத்தியதுடன் என்றுமே அதிலிருந்து வெளிவராமல் திருமண வாழ்க்கை வரை கொண்டு சென்றேன். அவள் மதூஷி ஜீவன்திகா திஸாநாயக்க.

**அவரிடம் காணப்படும் நல்ல பண்புகள்:** நற்குணங்கள் கொண்ட மனைவி. அதனால், எனது அன்பை பெற அவளுக்கு வாய்ப்பாக அமைந்தது.

**உங்களுக்கு பிடித்த பாடகர்:** விக்டர் ரத்நாயக்க

**பாடல்:** விசேடமாக ஒன்றுமில்லை. மனதுக்கு ஆறுதல் தரும் இனிமையான பாடல்களை கேட்பேன்

**திரைப்படம்:** வரலாற்றுப் புகழ் பெற்ற திரைப்படங்கள்

**நாவல்:** கே.ஜீ. கருணாதிலக்கவின் நாவல்கள்

**எதிர்கால இலக்கு:** தொழிலை சிறப்பாக மேற்கொண்டு எனது பிள்ளையின் கல்வியில் ஆர்வம் செலுத்துவேன்.

ஆக்கம்
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி



# வர்த்தக அலுவல்கள் மற்றும் அதனுடன் இணைந்த சேவைகள்

பாகம் 15

## நவீன முகாமையாளர்களுக்கு தேவையான தகுதி மற்றும் திறன்கள்

மனித தொழில்நுட்பம் மற்றும் அடிப்படைக் கருத்துக்கள் மாத்திரம் நவீன முகாமையாளர்களுக்கு போதுமானதாக கருத முடியாது. தற்போதைய வியாபார உலகில் சிறந்த முகாமையாளராக இருப்பதற்கு திறன்கள் மற்றும் தகுதிகள் பல உள்ளன.

- **முடிவெடுக்கும் தகுதி**
  பிரச்சினைகள் ஏற்படும் முடிவெடுக்கவும் அவற்றை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தும் திறமை.

- **தொலைத்தொடர்பு தகுதி**
  மொழிப் பரீட்சயம், மற்றவருடன் தொடர்புகளை ஏற்படுத்தல், வெற்றிகரமான செயற்பாடு, சுயநலமற்ற முயற்சி

- **உலகளாவிய முகாமைத்துவ தகுதி**
  கைத்தொழில் கொடுக்கல்வாங்களுக்கு தேவையான அறிவு, உலகளாவிய அறிவுடன் பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய முகாமைத்துவ திறமை



நேர முகாமைத்துவம் செய்யும் தகுதி – நேரத்தை திறனான முறையில் செலவழிக்கும் திறமை

வீணாக நேரத்தை போக்குவதற்கு நேரத்தை திறன்பட முகாமைத்துவம் செய்ய வேண்டும். நேரம் விரயமாவதற்கான பிரதான காரணங்கள் சில காணப்படுவதுடன் அவற்றை தீர்ப்பதற்கு நேர முகாமைத்துவ தகுதி மிகவும் அவசியமாகும்.

### வியாபாரத்தில் முகாமையாளரின் நேர விரயம் ஏற்படுவதற்கான காரணங்கள்

1. தேவையற்ற கடிதங்களை எழுதுதல்
2. தேவையற்ற நீண்ட நேர தொலைபேசி உரையாடல்
3. தேவைவற்ற கூட்டங்கள்
4. இறைச்சலுடான தொடர்பாடல்
5. முன் அறிவித்தல் இல்லாமல் வருகை தரல்
6. நோக்கம் தெளிவின்மை
7. தேவையற்ற வேலையில் ஈடுபடல்
8. தேவையற்ற ஒரு விடயத்துக்கு முன்னுரிமை அளித்தல்
9. ஒரு வேலைக்கு தாமதமாக வருகை தரல்
10. வேண்டுமென்றே ஓய்வெடுத்தல்
11. காரியாலய வேலைகளை வேண்டுமென்றே பிற்போடல்
12. திறனற்ற ஊழியர்கள் அல்லது தலைமைகள்

### நேரத்தை திறனாக மாற்றுவதற்கு முகாமையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய உபாயங்கள்

1. நேரம் பொன்னானது என்பதை உணர்ந்து கொள்ளல்
2. நேரத்தை திட்டமிடும் முறைகளை கையாளல் / நேர அட்டவணை
3. உற்பத்தி திறனாக மற்றவர்களுக்கு வேலைகளை வழங்குவதன் மூலம் நேரத்தை சேமித்துக் கொள்ளல்
4. தற்போது நேர விரயம் தொடர்பாக ஆராய்தல் / கடந்த காலம் மற்றும் தற்போதைய காலங்கள் தொடர்பில் முறையாக கையாளல்
5. நேரம் தொடர்பில் சாதகமான எண்ணங்களை உருவாக்குதல்
6. நேர முகாமைத்துவ உபகரணம் மற்றும் வேலைத்திட்டங்களை கையாளல்
7. கடதாசி மூலம் செய்யும் வேலைகளை உற்பத்தி திறனான எண்ணங்களை உருவாக்குதல் (5s)

### சிறந்த முகாமையாளராக இருப்பதற்கு அவரிடம் இருக்கவேண்டிய நற்பண்புகள்

ஒப்பீட்டு ரீதியில் நோக்கும் போது முகாமையாளரின் செயற்பாடுகள் தனி நபருடன் தொடர்பாக இருக்கும். அது தனிநபரினால் செய்யக்கூடிய செயற்பாடுகளாகும். அவ்வாறே அது சற்று கடினமானதுமாகும். அதற்காக முகாமையாளருக்கு கல்விப் பயிற்சி, அனுபவம் மிகவும் அவசியமாகும். இதற்கு மேலதிகமாக முகாமையாளரிடம் காணப்பட வேண்டிய நற்பண்புகள் சில.

1. நியாயமாக நடந்து கொள்ளல்
2. விட்டுக் கொடுத்தல்
3. நிலையாக இருத்தல்
4. தொடர்புபட்டிருத்தல்
5. கருணை
6. தன்னம்பிக்கை
7. இதயபூர்வமாக
8. நியாயமான புரிந்துணர்வு
9. **நோக்கம் தொடர்பில் தெளிவு**

### முகாமைத்துவத்தின் புதிய போக்கு

- வியாபார செயற்பாட்டில் சிலவற்றை வெளியாருக்கு வழங்குதல்

  நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சில விடயங்களை வெளி நிறுவனங்களுக்கு வழங்கி கொந்தராத்து அடிப்படையில் சேவையைப் பெற்றுக் கொள்வதாகும் (உதாரணம் - செயற்பாட்டு அலுவல்கள் / பாதுகாப்பு அலுவல்கள் / நிறுவனத்தை சுத்தம் செய்தல்)

- அறிவை அடிப்படையாகக் கொண்ட சில செயற்பாடுகளை வெளியாருக்கு வழங்குதல்

  நிறுவனத்தினால் செய்யப்படும் அறிவை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளை வெளி நிறுவனங்களுக்கு வழங்கி கொந்தராத்து அடிப்படையில் சேவையைப் பெற்றுக் கொள்வதாகும் (உதாரணம்: தகவல் மற்றும் தொலைத்தொடர்பு அலுவல்கள்)

- கைத்தொழில் வெளியிடுகள் குறைவடைதல்

  ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தை திட்டமிட்டு முன்னெச்சரிக்கையுடன் குறைத்துக் கொள்வதாகும். இதன் கீழ் முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் எண்ணிக்கை குறைக்கப்பட்டு நிறுவன உற்பத்தி வீழச்சியடைந்து உற்பத்தி கலவையும் குறைவடைவதற்கான வாய்ப்புண்டு.

- மிகவும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ள முகாமைத்துவம்



சந்தகெலும் ஜயதுங்க,
கணக்காளர்,
பிரைம் கிராமின்
மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்.




தேவையான போது தலைசாய்த்து மற்றவர்களை விட உயர்வானவர் என்பது நிமிர்ந்து நடப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்

# பதுளை கிளை புதிய இடத்தில்

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட் கிளைகளில் 14ஆவது கிளையான பதுளை கிளை புதிய விலாசத்தில் ஏப்ரல் மாதம் 10ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 8.55மணி சுபநேரத்தில் இயங்க ஆரம்பித்தது.

இல. 67-சி, பசறை வீதி, பதுளை என்ற விலாசத்தில் இவ்வளவு காலமும் இயங்கி வந்த பதுளை கிளை இல.24/1/1, அநாகரிக தர்மபால மாவத்தை, கொழும்பு என்ற விலாசத்தில் வியாபார அலுவல்கள் எதிர்வரும் காலங்களில் இடம்பெறும். புதிய இடத்தில் கிளை நிறுவுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர் சமிந்த பிரபாத் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட் பிரதி பொது முகாமையாளர்களான அனஸ்லி பொ்னாந்து, பிமல் செனவிரத்ன ஆகியோருடன் உதவி பொது முகாமையாளர் பெத்தும் சம்பத் அவர்கள் உட்பட பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட் உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள் அதிகளவானோர் கலந்து கொண்டனர். பிரைம் கிராமின் நிலையான வைப்பு, யாலு, பிரைம் செவின், மியுலெசி சத்கார, போன்ற கணக்குகளும் பதுளை கிளையில் ஆரம்பிக்கப்பட்டன. நிதி கொடுக்கல் வாங்களுடன் பல்வேறு சலுகைகளை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் உன்னத நோக்கத்தில் இவை ஆரம்பிக்கப்பட்டதாக நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய கிளை முகாமையாளர் லலித் பண்டார அபேசிங்க அவர்கள் மெஹவரவுக்கு தெரிவித்தார்.












கீழ்க்குறிப்பிடும் உத்தியோகத்தர்களுக்கு மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்தினால் அண்மையில் பதவி உயர் வழங்கப்பட்டன. புதிய பதவிகளை பெற்ற சகலருக்கும் எமது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

| பெயர் | கிளை | கிடைத்த பதவி |
|---|---|---|
| நுவன் சஞ்சீவ | மதவாச்சி | பதில் பிரிவு முகாமையாளர் |
| சுஜித் ரோஹான் | வத்தளை | பதில் பிரிவு முகாமையாளர் |
| நுவன் தமித் | அம்பாறை | பதில் உதவி கிளை முகாமையாளர் |
| வர்ண தஸநாயக்க | அம்பாறை | பதில் பிரிவு முகாமையாளர் |
| பிரதீப் சாமர ரத்னாயக்க | தலைமையகம் | பதில் பிரதேச முகாமையாளர் |
| வீ. கிருஷ்ணமூர்த்தி | வவுனியா | பதில் உதவி கிளை முகாமையாளர் |
| எஸ். ஜேசுதாஸன் | வவுனியா | பதில் பிரிவு முகாமையாளர் |
| எப்.பி. அலன்குமார் | முல்லைத்தீவு | பதில் பிரிவு முகாமையாளர் |
| கே. ஸ்ரீகாந்தன் | மல்லாவி | பதில் பிரிவு முகாமையாளர் |
| சமீர வந்த குமார | நாவலப்பிட்டி | பதில் பிரிவு முகாமையாளர் |
| கயான் லியனாராச்சி | கலென்பிந்துனுவெவ | பதில் உதவி கிளை முகாமையாளர் |
| தினுஷ சத்துரங்க | ஹொரனை | பதில் பிரிவு முகாமையாளர் |
| துசித்த பெரேரா | ஹொரனை | பதில் பிரிவு முகாமையாளர் |
| ரசிக்க பிரேமலால் | சிலாபம் | பதில் பிரிவு முகாமையாளர் |
| சுகத் பண்டார யாப்பா | நகரக்கிளை | பதில் உதவி கிளை முகாமையாளர் |
| பிரியங்கர பெரேரா | நகரக்கிளை | பதில் பிரிவு முகாமையாளர் |
| அருண லக்சிறி | பெலியத்தை | பதில் பிரிவு முகாமையாளர் |
| திமுத் சாமர | பிடிகல | பதில் பிரிவு முகாமையாளர் |
| விராஜ் விதுரங்க | தெஹியத்தகண்டி | பதில் பிரிவு முகாமையாளர் |

## Happy Birthday

ஏப்ரல், மே மாத பிறந்த நாளைக் கொண்டாடும் பிரைம் கிராமின் நிறுவன ஊழியர்க ளுக்கு எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்...!

| பெயர் | திகதி | கிளை |
|---|---|---|
| திரு. ஷான் மல்ஸா | ஏப்ரல் 15 | நீர்கொழும்பு |
| திரு. சசன்க அபேசூரிய | ஏப்ரல் 15 | பெலியத்தை |
| திரு. லக்மால் சந்தருவன் | ஏப்ரல் 16 | காலி |
| திரு. யோகராஜ் பிரகாஷ் | ஏப்ரல் 19 | தலைமையகம் |
| திரு. கயான் ரவிந்து | ஏப்ரல் 19 | நாவலபிட்டி |
| திரு. பத்மநாதன் தனூஷன் | ஏப்ரல் 19 | கல்முனை |
| திரு. அசக்க சேனக பெரேரா | ஏப்ரல் 19 | தம்புள்ள |
| திரு. அசேல சந்தருவன் | ஏப்ரல் 19 | ஹோமாகம |
| திருமதி. சுபாஷினி குரே | ஏப்ரல் 20 | மொரட்டுவை |
| திரு. பாரூக் ரிபாய்டீன் | ஏப்ரல் 20 | பொத்துவில் |
| திரு. புத்திக பலிஹக்கார | ஏப்ரல் 21 | தலைமையகம் |
| திரு. சஜீவ பிரியங்கர | ஏப்ரல் 21 | நிக்கவரெட்டிய |
| திரு. திலான் சஞ்சீவ | ஏப்ரல் 21 | அம்பலாங்கொடை |
| திரு. ஷாமர தரங்க | ஏப்ரல் 21 | தலைமையகம் |
| திரு. துஷார ஹேஷான் | ஏப்ரல் 22 | பொத்துவில் |
| திரு. பீ.டி. மஹிந்தசோம | ஏப்ரல் 23 | ஜாஎல |
| திரு. கயான் அனுருத்த | ஏப்ரல் 23 | கடுவளை |
| திரு. தேவசீலன் ரிக் | ஏப்ரல் 23 | வத்தளை |
| திரு. சுப்ரமணியம் தயாலன் | ஏப்ரல் 23 | நுவரெலிய |
| திரு. வஜிர லக்மால் | ஏப்ரல் 23 | அநுராதபுரம் |
| திரு. புத்திக பிரியந்த | ஏப்ரல் 23 | மாத்தளை |
| திரு. கெலும் திலங்க | ஏப்ரல் 24 | கந்தளாய் |
| திரு. அஜித் புஷ்பகுமார | ஏப்ரல் 25 | கண்டி |
| திரு. உபாலி ஜயசிங்க | ஏப்ரல் 25 | குருநாகலை |
| திரு. அசேல குமார | ஏப்ரல் 25 | ஹோமாகம |
| திரு. ரி. கஜேந்திரன் | ஏப்ரல் 25 | யாழ்ப்பாணம் |
| திரு. ஷேஹானி நிரங்கா | ஏப்ரல் 26 | பதுளை |
| திரு. இந்துனில் கருணாரத்ன | ஏப்ரல் 26 | பதவிய |
| திரு. இசுரு செனவிரத்ன | ஏப்ரல் 27 | சிலாபம் |
| திரு. கோவிந்த வர்ணகுமார | ஏப்ரல் 27 | தம்புள்ளை |
| திரு. பிரின்சஸ் அலன்குமார் | ஏப்ரல் 27 | முல்லைத்தீவு |
| திரு. இந்திக பத்மகுமார | ஏப்ரல் 28 | பண்டாரவளை |
| திரு. அசங்க பிரபாசிரி | ஏப்ரல் 28 | தலைமையகம் |
| திரு. திலங்க பண்டார | ஏப்ரல் 28 | குருநாகலை |
| திரு. மாலக்க நிஷாந்த | ஏப்ரல் 28 | எம்பிலிபிட்டி |
| திரு. ரோஹித்த கருணாசிங்க | ஏப்ரல் 28 | கல்கமுவ |
| திரு. ஷானக சம்பத் | ஏப்ரல் 28 | களுத்துறை |
| திரு. சுஜித் ஜயமால் | ஏப்ரல் 28 | கந்தளாய் |
| திரு. கசுன் பிரியங்கர | ஏப்ரல் 29 | கண்டி |
| திரு. எஸ். நவீந்தன் | ஏப்ரல் 29 | வவுனியா |
| திரு. வந்தகுமார | ஏப்ரல் 30 | நாவலப்பிட்டி |
| திரு. எஸ். ரகுமணிவானன் | மே 01 | திருகோணமலை |
| திரு. சமீர சந்தருவன் | மே 01 | மத்துகம |
| திரு. கே. கணகலிங்கம் | மே 01 | யாழ்ப்பாணம் |
| திரு. கணேஸ் மகேஷ் | மே 01 | தலைமையககம் |
| திரு. அஜித் குமார | மே 03 | மஹியங்கனை |
| திரு. துசித பெரேரா | மே 03 | ஹொரனை |
| திரு. எஷான் மதுஜித் | மே 03 | இரத்தினபுரி |
| திரு. லக்மால் கமகே | மே 03 | நகரக்கிளை |
| திரு. நிரோஷன் தேஷப்பிரிய | மே 04 | கேகாலை |
| திரு. சீ. அசோக்குமார் | மே 04 | மன்னார் |
| திரு. ருசிரு பிரேமலால் | மே 04 | கந்தளாய் |
| திருமதி. பீ. மதுஷா | மே 04 | யாழ்ப்பாணம் |
| திரு. சரத்குமார | மே 05 | நிகவரெட்டி |
| திரு. ஷானக மதுரங்க | மே 05 | தலைமையகம் |
| திரு. கசுன் மதுரங்க | மே 05 | மொரவக்க |
| திரு. சமத் உசான் | மே 05 | வெலிமடை |
| திரு. நுவன் சமீர | மே 06 | தலைமையகம் |
| திரு. லலிந்த சமீத் | மே 07 | தலைமையகம் |
| திரு. கிரிசாந்த மைத்திரி | மே 07 | தம்புள்ளை |
| திரு. பிரனீத்த மதுசங்க | மே 07 | ஜாஎல |
| திரு. பராக்கிரம துல்லேவ | மே 07 | மாத்தளை |
| திரு. ரந்தீப் ரோஹித்த | மே 07 | கந்தளாய் |
| திரு. பீ. தனஞ்சய | மே 07 | பதுளை |
| திருமதி. சதனி சமாலி | மே 07 | ஹம்பாந்தோட்டை |
| திரு. மில்ரோய் ஸ்டென்லி | மே 07 | நாவலப்பிட்டி |
| திரு. சுப்ரமணியம் விமலன் | மே 07 | கிளிநொச்சி |
| திரு. தமீர மெதகெதர | மே 07 | கேகாலை |
| திரு. ரொஷான் தில்ருக் | மே 08 | கேகாலை |
| திரு. எம்.சிந்தனைக்குமாரன் | மே 08 | மட்டக்களப்பு |
| திரு. உதார சம்பத் | மே 09 | வென்னப்புவ |
| திரு. சந்தன ராஜசிங்க | மே 10 | ஹம்பாந்தோட்டை |
| திரு. மனோஜ் சிந்தக | மே 10 | கம்பஹா |
| திரு. சிந்தக சுஜித் | மே 10 | பலாங்கொடை |
| திரு. வினோத் சத்துரங்க | மே 10 | மத்துகம |
| திரு. சுபுன் அசேல குமார | மே 10 | அநுராதபுரம் |
| திரு. என். குணபாலசிங்கம் | மே 10 | வவுனியா |
| திரு. பிரசான் தனஞ்சய | மே 11 | களுத்துறை |
| திரு. ஆர்.ஏ. உதயங்க | மே 11 | நகரக்கிளை |
| திரு. பத்மநாதன் நிமலதாசன் | மே 11 | யாழ்ப்பாணம் |
| திரு. ஹர்ஷ மஹவத்த | மே 11 | களுத்துறை |
| திரு. சமீர சந்திரநாத் | மே 12 | தலைமையகம் |
| திரு. கெலும் நிஷாந்த | மே 12 | மதவாச்சி |
| திரு. சமந்த குமார | மே 12 | நிகவரெட்டி |
| திரு. ஹர்ஷ மதுமாதவ | மே 12 | ஹொரனை |
| திரு. நாகலிங்கம் பிரியதர்ஷன் | மே 12 | கல்முனை |
| திரு. ஆர்.ஏ. ரொஷான் | மே 13 | அநுராதபுரம் |
| திரு. சந்தன லலிந்த | மே 13 | கடுவளை |
| திரு. சந்தன பண்டார | மே 13 | நாவலப்பிட்டி |
| திரு. எம். சுரேஷ் | மே 15 | வவுனியா |
| திரு. சிவலிங்கம் லோகேஷ் | மே 14 | நெல்லியடி |
| திரு. எரந்த ராஜபக்ஷ | மே 14 | தம்புள்ளை |

மெஹெவர
பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்
இல. : 168, நாவல வீதி, நுகெகொடை
தொலைபேசி: 0112176262 பெக்ஸ் : 0112825843
மின்னஞ்சல்: manjula.p@primegrameen.lk
இணையம்: www.primegrameen.com
பணிப்பாளர்: சமிந்த பிரபாத் (முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர்)
பிரதம ஆசிரியர்: மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
பக்க வடிவமைப்பு: கே.டி. ஷமில சிந்தக (அர்ஜுன கிராபிக்ஸ் (தனியார்) நிறுவனம்
கணணி தட்டெழுத்து உதவி: உதாரி தர்மவர்தன / உதார தனஞ்சய
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க